**சிறப்பு அமர்வு வழக்கு எண். 15/20** **பெயர்: அசா4 – வித்யா**

**தேதி: 22.02.2021**

அ.சா. 4 மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 6 ஆம் வகுப்பு படிக்கிறேன். சங்கர் என்றவரை எனக்கு உறவினர் என்ற முறையில் தெரியும். என்னிடத்தில் சங்கர் தப்பு எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் அவர் என்னிடத்தில் தப்பு பண்ணார். இப்போதிருந்து 3 மாதத்திற்கு முன்பு போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் எந்த மருத்துவமனைக்கு போனேன் என்று எனக்கு தெரியவில்லை. மருத்துவர் என்னிடத்தில் கேட்டார். என்னிடத்தில் மருத்துவர் அந்த இடத்தில் வலிக்குதா என்று கேட்டார். என்னிடத்தில் தப்பு பண்ண விவரத்தை என் அப்பா, அம்மாவிடம் 3 நாட்கள் கழித்து சொன்னேன். சங்கர் என்னிடத்தில் தப்பு பண்ண விவரத்தை தன் பெற்றோரிடம் சொல்லவேண்டாம் என்று சொன்னதால் நான் என் அப்பா, அம்மாவிடம் சொல்லவில்லை. என்னை பெண் போலிசார் விசாரித்தார்கள். எந்த ஊர் போலிஸ் என்று எனக்கு தெரியவில்லை. போலிசார் காக்கி சட்டை போட்டு இருந்தார். பெரம்பலூரிலுள்ள மெயின் ரோட்டில் இருக்கும் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். சாட்சி சொல்ல வரும் போது என்னிடத்தில் இப்படிதான் சொல்லவேண்டுமென்று சொல்லிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்தை தவிர வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சி சொல்லவில்லை. சம்பவம் நடந்து 3 நாட்களாக என் அப்பா, அம்மா என்னுடன்தான் இருந்தார்கள். சம்பவம் நடந்த சமயத்தில் நான் வீட்டில்தான் இருந்தேன். சம்பவம் நடந்த சமயத்தில் நான் இருந்த ஊர் எனக்கு தெரியவில்லை. எந்த ஊரில் என் அப்பா, அம்மா இருந்தபோது சம்பவத்தைப் பற்றி சொன்னேன் என்பது எனக்கு

தெரியவில்லை. எதிரி சங்கரிடமிருந்து என் அப்பா, அம்மா பணம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். பணத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக என்னை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.